

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து** : கிறிஸ்துவ ஒருமைப்பாடு: எல்லா கிறிஸ்தவர்களும் திருச்சபை ஒன்றிப்பை மீண்டும் நிலைநிறுத்த செபத்திலும், சகோதரத்துவ தர்மத்திலும் உழைக்கவும், ஒத்துழைப்பினால் மனுக்குலம் எதிர்நோக்கும் சவால்களை சந்திக்கவும் ஆண்டவரின் படிப்பினைக்கு விசுவாசமாய் இருக்க வேண்டுமென்று

**ஜனவரி மாத கரு** : இராஜ்ஜியத்திற்கான கடவுளின் கொடை

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 1 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | மரியாள் இறைவனின் தாய் |
| ஜன 2 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பெரிய பசிலியார், நசியான்சன் கிரகோரியார் |
| ஜன 3 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | இயேசுவின் திருப்பெயர் |
| ஜன 5 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | கிறிஸ்து பிறப்பின் வாரநாள் |
| ஜன 6 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | கிறிஸ்து பிறப்பின் வாரநாள் |
| ஜன 7 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பொனாப்போர்த்து இரேய்முந்து |
| ஜன 8 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | ஆண்டவரின் திருக்காட்சி |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | ஆண்டவரின் திருக்காட்சி |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஜன 4 புதன் | மாலை 7.30 | பெர். மை 1-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| | மாலை 7.30 | பெர். மை 2-1 | மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம் |
| | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| ஜன 5 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மையம் | பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| ஜன 6 வெள் | மாலை 7.00 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு (பெற்றோர்கள்& ஞானப்பெற்றோர்கள்) |
| ஜன 7 சனி | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜன 8 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |

**ஜனவரி மாத திருமணங்கள் 2017**

ஜன 14 மாலை 4.30 திருப்பலி (ஆ) கெல்வின் ராஜ் த/பெ ஞானபிரகாசம் & எடலின் த/பெ என்ட்ரூஸ்
ஜன 21 காலை 11.00 திருப்பலி (ஆ) ஜோன் போல் ஜீவன் த/பெ ஜோசப் & ஏனா த/பெ கிளமென்ட் சால்ஸ்
ஜன 21 மாலை 4.30 திருப்பலி (த) சால்ஸ் சாலமோன் திரவியம் அந்தோணி & கிறிஸ்டினா பரமேஸ்வரி கோவிந்தசாமி
ஜன 28 மாலை 4.30 திருப்பலி (ஆ) ரேமன்ட் கெய்த் த/பெ ஜேசுதாஸ் & யுனிசா த/பெ A. கமலதாஸ்
ஜன 30 மாலை 4.30 திருப்பலி (த) ஸ்டீவ் டென்னிஸ் த/பெ டேவிட் & வெரோணிக்கா த/பெ டேவிட்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. புத்தாண்டு விடுமுறைகள்:** பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும். புத்தாண்டு: 1 (ஞாயிறு) - 2 (திங்) வரை

2. **பொங்கல் கொண்டாட்டம்:** பொங்கல் திருப்பலி - அறுவடை திருநாள் 14 ஜன 2017 (சனி) @ மாலை 6.00க்கு கொண்டாடப்படும். திருப்பலிக்கு பிறகு பொங்கல் நிகழ்ச்சிகள் மாலை 7.00 ~ 10.30 வரை பங்கு மண்டபத்தில் நடைபெறும். இந்த கொண்டாட்டத்திற்கு அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள்.

3. **சீடத்துவ நிகழ்வுகள்:** "நற்செய்தியில் இயேசு" (ஆங்கிலம்): இது ஒரு 30 வார நிகழ்வு. அடுத்த வருடம் நமது பங்கில் நடைபெறும். இதுவரைக்கும் 20 நபர்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர். எங்களுக்கு 6 நபர்கள் தேவைப்படுவதால் நாங்கள் இன்னும் பெயர்களை பதிவு செய்கின்றோம். ஆர்வமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் பெயர்களை பதிவு செய்யலாம். மேல் விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

4. **அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** 7 ஜன 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

5. **கத்தோலிக்க நிச்சயிக்கப்பட்ட நிகழ்வு (EE) 2017**

2017ல் அல்லது 2018ல் திருமணம் புரிய திட்டமிட்டுள்ள தம்பதிகள் தயவுசெய்து கத்தோலிக்க நிகழ்வு(EE) தேதிகளை கவனிக்கவும்

**2017 வாரயிறுதி ஆங்கில நிகழ்வுகள்**

ஜன 13 - 15 ~ பினாங்கு
மார்ச் 24 - 26 ~ பினாங்கு
ஜூன் 9 - 11 ~ பினாங்கு
ஆக 18 - 20 ~ பினாங்கு
நவ 10 - 12 ~ பினாங்கு

**2017 வாரயிறுதி தமிழ் நிகழ்வுகள்**

பிப் 24- 26 ~ புனித ஜஸ்டன் & இம்பர்ட் சிற்றாலயம், பிறை
மே 26 - 28 ~ புனித அன்னம்மாள் ஆலயம், புக்கிட் மெர்தாஜாம்
ஆக 25 - 27 ~ புனித ஜஸ்டன் & இம்பர்ட் சிற்றாலயம், பிறை
நவ 17 - 19 ~ புனித அன்னம்மாள் ஆலயம், புக்கிட் மெர்தாஜாம்

- எல்லா ஆங்கில வாரயிறுதிகளும் ஸ்டெல்லா மேரிஸ், பினாங்கில் நடைபெறும். இந்த நிகழ்வுகள் வெள்ளி மாலை தொடங்கி ஞாயிறு மாலை நிறைவடையும். தயவு செய்து பங்கு குருவானவரை சந்தித்து பதிவு பாரங்களை பெற்றுக்கொள்ளவும்.

6. **வேலை வாய்ப்பு:** ஈப்போ பாடாங் அருகில் உள்ள ஈப்போ Club- ல், பணிப்பெண், பணியாளர் மற்றும் வரவேற்பாளர் வேலைக்கு தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: Yvett – Secretariat Manager 012-2919566

7. **மாபெரும் விற்பனை:** அவே சிற்றாலய கட்டிட நிதிக்காக நாங்கள் மாபெரும் விற்பனைக்கு ஏற்பாடு செய்கிறோம். நாங்கள் கதை புத்தகங்கள், கண்ணாடிப் பொருள்கள், நினைவுப்பொருள்கள் போன்ற அழகிய அன்பளிப்பு வகைகளை சேகரிக்கிறோம். கண்டிப்பாக ஆடைகள் வேண்டாம்!!!

8. **ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

9. **கல்லறை:** தம்பூன் கல்லறை காலை 8.00 ~ மாலை 6.00 வரை திறந்திருக்கும். மற்ற நேரங்களில் மூடப்பட்டிருக்கும். இது ஏதேனும் தேவையற்ற செயல்கள் நடக்காமல் தடுப்பதற்காக!

10. **எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும்.

11. **விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

12. **கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி டிசம்பர் 2016 வரைக்கும்:**

கிறிஸ்து அரசர் சிற்றாலயம் - 216,889.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - 240,540.31 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)